


'அனிமேஷன்' படங்கள் என்று சொன்னாலே பெரும்பாலானவர்களுக்கு டிஸ்னியின் 'மிக்கி மவுஸ்' போன்ற கார்ட்டூன் படங்களே நினைவுக்கு வரும்.

அனிமேஷனைக் கையாண்டு சீரியஸான படங்களையும் தயாரிக்க முடியும். இந்த பாணி படங்களை எடுப்பதில் வெற்றி யடைந்திருக்கிறார் ஒரு இந்தியர்.

டெல்லியைச் சேர்ந்த 29 வயது இளைஞரான குல் ராமானி, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் மேற்கு ஜெர்மனிக்குச் சென்றார். ஓவியராகச் சென்றவர், அங்கே கார்ட்டூன் பட இயக்குநராக மாறி விட்டார். அண்மையில் அவருடைய படங்கள் சென்னை, மாக்ஸ்முல்லர் பவனில் திரையிடப்பட்டன.

'அனிமேஷன்' பட விஷயத்தில் இந்தியா மிக மிகப் பின் தங்கியிருக்கும் சூழ்நிலையில், இரண்டு சர்வதேச அனிமேஷன் திரைப்பட விழாக்களில் இந்தியாவின் சார்பில் தன் படங்களை குல் ரமானி கலந்து கொள்ளச் செய்தார். பான் நகரில் நடந்த விழாவில் அவருடைய 'ட்ராகுலாவின் டயரி' என்ற படம் ஆடியன்ஸால் 'பாப்புலர் படம்' என்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

இன்றைய உலகில் அணு ஆயுதங்களைக் குவித்தவாறு யுத்த ஆயத்தங்களில் வல்லரசுகள் ஈடுபடும் போக்கை, ரத்த வெறி பிடித்த ட்ராகுலாவோடு ஒப்பிடும் படம் இது.

நான்காவது வயதிலிருந்து சங்கர்ஸ் வீக்லி சித்திரப் போட்டிகளில் தொடர்ந்து பரிசுகள் வாங்கியிருக்கும் குல் ராமானி, ஒரு எலெக்ட்ரிகல் இன்ஜினீயரிங் பட்டதாரி.

“குழந்தையாக இருந்தபோதே ஒரு முறை லாலிபாப்

வேண்டுமென்று கேட்க நினைத்து அந்தப் பெயர் சொல்லத் தெரியாததால் எங்களிடம் படம் போட்டுக் காட்டினான்!'' என்றார் குல் ரமானியின் சகோதரி மீனா ரமானி. ''அக்கா சொல்வது நடந்ததா என்று எனக்குத் தெரியாது. எனக்கு நினைவிருப்பதெல்லாம் நான் கண்ட கனவுதான். ஒரு பிரும்மாண்டமான அறையில் காகிதக் குவியல்களுக்கு மத்தியில் நான் உட்கார்ந்து பெயிண்டிங் செய்வதாகச் சின்னவயசில் கனவு வந்தது'' என்கிறார் குல்.

இந்தியாவில் வழங்கும் நாடோடிக் கதைகளில் ஒன்றைப் படமாக்கப் போகிறாராம். அவருடைய கார்ட்டூன் படங்களின் சிறப்பு அம்சம் - இந்திய பாணியிலான சாஸ்திரீய இசைதான்.

சென்னை ஓவியக் கல்லூரி மாணவர்களும், லயோலா கல்லூரி மாணவர்களும் குல் ரமானி நடத்திய ஒரு நாள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டார்கள். 'அனிமேஷன்' படம் எடுக்கப் போதுமான காமிரா வசதிகள் சென்னையில் இல்லை என்பது எல்லோருக்கும் வருத்தமாக இருந்தது.

“'அனிமேஷ'னுக்குத் தேவையானதெல்லாம் ஓவியங்களும், ஒவ்வொரு ப்ரேமாகப் படமெடுக்கும் ஸ்பெஷல் காமிராவும் தான். இந்த வகைப் படங்களைப் பொறுத்தவரை நடிகர்கள் அரசியல் தலைவர்களாகி விட்டால் படம் பாதியில் நின்று விடுமே என்ற கவலையே கிடையாது. ஆனால், பொறுமைதான் ஏராளமாகத் தேவை'' என்றார் குல்.

பொறுமை ரொம்ப தேவைதான். ஏனென்றால், ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு படம் வரைந்தாக வேண்டும். அருகே இருக்கும் குல் வரைந்த படங்கள் திரையில் சில செகண்டுகளில் தோன்றி மறைந்துவிடும்!

**- ரேஞ்சர்**

**21.3.1984**